# 25-05-2024 செய்தி

## கண்ணாடியிழை உடற்கூறியல் அருங்காட்சியகம் துவக்கம்

- தேனி அரசு மருத்துவக் கல்லூரியில் உடல் உறுப்புகளை முப்பரிமாணத்தில் இளநிலை, முதுகலை மருத்துவ மாணவர்கள் கண்டறிந்து படிக்க உதவும் வகையில், கண்ணாடியிழை உடற்கூறியல் எனும், பைபர் கிளாஸ் எம்பெட்டிங் தொழில் நுட்பத்தில், பிளாஸ் டினேஷன் மூலம் உருவான அருங்காட்சியகம் துவக்கப்பட்டு உள்ளது.

- இறந்த மனித உடல்களையும், உடல் உறுப்புகளையும், பார்மலின் என்ற வேதி திரவப் பொருளால் பதப்படுத்தி, அதை வைத்து மருத்துவ மாணவர்களுக்கு பாடங்கள் கற்பித்து வந்தனர்.

- பார்மலினால் பதப்படுத்தப்படும் உடல்கள், 10 ஆண்டுகளுக்கு மேல் பதப்படுத்த முடியாது. பார்மலின் திரவம், உடல் உறுப்புக்களை அரித்துவிடும்.

- தேனி அரசு மருத்துவக் கல்லூரி உடற்கூறியல் துறை தலைவர் டாக்டர் எழிலரசன், தற்போது, மனித உடல்கள், உடல் உறுப்புக்களை கண்ணாடியிழைகளால் உயர் வெப்பநிலையில் பதப்படுத்தி, பிளாஸ் டினேஷன் செய்யப்பட்ட உறுப்புகளை ஒன்றிணைத்து புதிய அருங்காட்சியகத்தை உருவாக்கியுள்ளார். இதை நேற்று மருத்துவக்கல்லூரி டீன் பாலசங்கர் துவக்கி வைத்தார்.

- துறைத்தலைவர் டாக்டர் எழிலரசன் கூறுகையில், "வேலூரில் தனியார் மருத்துவக்கல்லூரி தவிர்த்து, இந்திய அளவில் அரசு மருத்துவ கல்லூரிகளில், தேனியில் முதன் முதலாக இந்த அருங்காட்சியகம் துவங்கப்பட்டுள்ளது."

## மைசூரு மருத்துவர் இயக்கிய குறும்படத்துக்கு 'லா சினெஃப்' விருது

- கேன்ஸ் திரைப்பட விழாவில் 'லா சினெஃப்' விருது பிரிவில் மைசூரு மருத்துவர் சித்தானந்த எஸ்.நாயக் இயக்கிய சன்ஃ பிளவர்ஸ் வேர் தி பர்ஸ்ட் ஒன்ஸ் டு நோ எனும் குறும்படம் முதல் பரிசை வென்றுள்ளது.

- 77-ஆவது கேன்ஸ் திரைப்பட விழா பிரான்ஸ் நாட்டின் கேன்ஸ் நகரில் நடைபெற்று வருகிறது.

- அடுத்த தலைமுறை கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் திரைப்படக் கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படும் 'லா சினெஃப்' விருதுகள் அறிவிக்கப்பட்டன.

- கேன்ஸ் திரைப்பட விழாவின் உச்ச அங்கீகாரமாக கருதப்படும் 'கோல்டன் பாம்' விருது அறிவிக்கப்பட உள்ளது.

- இந்த விருதுக்கான போட்டி பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்ட 19 படங்களில் 40 ஆண்டுகளுக்கு பிறகு 'ஆல் வி இமேஜின் ஏஸ் லைட்' எனும் இந்திய திரைப்படமும் இணைந்துள்ளது.

SURESH'